DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 353/2024

Prosecution PW 1

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | பாலசுப்பிரமணியன் |
| Father's Name | : | பழனியப்பன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 11.02.2026.

**1ம் எதிரி நீதிமன்ற காவலிலிருந்து காணொலி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டார். 2ம் எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் நரசிம்மபுரம், நடுத்தெருவில் குடியிருந்து எஸ்என் மளிகை ஸ்டோரில் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 18.03.2024ம் தேதி கரூர் செல்லும் வழியில் தெரசா காலனி அருகே நான் இருசக்கர வாகனத்தில் சென்றபோது, எனது நண்பர் ஒருவர் வந்ததால் நான் பேசிக் கொண்டிருந்த

ரெட்மீ போனை வண்டி கவரில் வைத்துவிட்டு நண்பருடன் டீ சாப்பிட சென்றேன். பின்னர், டீ சாப்பிட்டுவிட்டு வந்து பார்த்தபோது டேண்க் கவரில் இருந்த செல்போனை காணவில்லை. தேடி பார்த்தும் கிடைக்காததால் 07.05.2024ம் தேதி தாந்தோண்றிமலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது. **புகார் மனு அ.ச.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் தாந்தோன்றிமலை போலிசார் செல்போனை கண்டுபிடித்துவிட்டதாக சொன்னதன்பேரில் காவல் நிலையம் சென்றேன். எனது செல்போனை அடையாளம் காட்டினேன். பின்னர் நீதிமன்றத்தின் மூலம் மனு தாக்கல் செய்து செல்போனை பெற்றுக் கொண்டேன். என்னிடம் காட்டப்படும் போட்டோவிலுள்ள ரெட்மீ செல்போன் என்னுடையது. **அந்த போட்டோ அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (1ம் எதிரி தரப்பில்)**

**இல்லை.**

**குறுக்கு விசாரணை (2ம் எதிரி தரப்பில்)**

நான் 10 வகுப்பு வரை படித்துள்ளேன். 18.03.2024 அன்று என் செல்போன் காணாமல் போனது. சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையத்திற்கு 2 கி.மீ. தொலைவு இருக்கும். நான் ரெட்மீ போனை வண்டி கவரில் வைத்துவிட்டு நண்பருடன் டீ சாப்பிட சென்றேன். பின்னர், டீ சாப்பிட்டுவிட்டு வந்து பார்த்தபோது டேண்க் கவரில் இருந்த செல்போனை காணவில்லை என்று முதல் விசாரணையில் சொல்லியதைத்தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். காணாமல் போன தினத்தன்று காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. என்னுடைய செல்போன்தான் என்பதற்கு ஆதாரங்களை போலிசாரிடம் நான் கொடுத்தேன். அதை போலிசார் வாங்கிக் கொண்டனர். சம்பவ சமயத்தில் நான் பாக்கெட் வைத்த சட்டை போட்டு சென்றேனா என்றால்

ஆமாம். எனது செல்போனை வேறு விதத்தில் தொலைத்துவிட்டு பொய்யான புகார் கொடுத்துவிட்டு வண்டி கவரில் செல்போனை வைத்ததாகவும், அது காணாமல் போனதாகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார் கொடுத்த அன்று ஒரு நாள் விசாரித்தார்கள். பின்னர் 4,5 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். புகாரை நான்தான் எழுதினேன். காணாமல் போனதாக சொல்லப்படும் செல்போனின் மதிப்பு ரூ.10200/- ஆகும். அதை என்னுடைய புகாரில் சொல்லியுள்ளேன்.நான் சொல்வதுபோல எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. பொதுவாக எல்லோரும் செல்போனை சட்டை பாக்கெட்டில்தான் வைப்பார்கள் என்றாலும், டேண்க் கவரில் வைத்து தொலைத்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஓம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 353/2024

Prosecution PW 2

Deposition of Witness for Defence

Court

Name : காசி விஸ்வநாதன்

Father's Name : பழனியப்பா பிள்ளை

Village :

Taluk :

District :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 11.02.2026.

**1ம் எதிரி நீதிமன்ற காவலிலிருந்து காணொலி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டார். 2ம் எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் கிழக்கு நரசிம்மபுரத்தில் குடியிருந்து ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. என்னுடன் துரையரசு என்பவர் கையொப்பம் செய்தார். கடந்த 08.05.2024ம் தேதி தெரசா மேல்நிலை பள்ளி அருகே நானும் துரையரசும் காலை சுமார் 07.00 மணியளவில் சென்றுகொண்டிருந்தபோது

தாந்தோன்றிமலை போலிசார் செல்போன் காணாமல் திருடுபோன சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தனர். அதற்காக சம்பவ இடத்தில் நானும், துரையரசும் பார்வை மகசரில் கையொப்பம் செய்து கொடுத்தோம். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (1ம் எதிரி தரப்பில்)**

**இல்லை.**

**குறுக்கு விசாரணை (2ம் எதிரி தரப்பில்)**

08.05.2024ம் தேதி போலிசார் என்னை விசாரித்தனர். அ.சா.1 எனக்கு தம்பி முறையாவார். துரையரசும் நானும் என்ன வேலையாக சென்றோம் என்றால் காலி மனை இருக்கிறதா என்பதை விசாரிப்பதற்காக சென்றோம். மேற்படி விவரத்தை போலிசாரிடம் சொன்னேனா என்றால் கேட்கவில்லை, அதனால் சொல்லவில்லை. நான் கையொப்பம் செய்த தாளில் எழுதியிருந்த விவரம் எனக்கு தெரியும். சம்பவம் நடந்தை பற்றி எழுதியிருந்தது. மாதிரி வரைபடத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. வெற்றுத்தாளில்தான் நான் கையொப்பம் செய்தேன். நான் சொல்வது போல எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், அ.சா.1 எனது உறவினர் என்பதாலும், நானும், துரையரசும் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஓம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**